இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இதைக் கண்ட சீமோன் பேதுரு, இயேசுவின் கால்களில் விழுந்து, "ஆண்டவரே, நான் பாவி, நீர் என்னை விட்டுப் போய்விடும்" என்றார். அவரும் அவரோடு இருந்த அனைவரும் மிகுதியான மீன்பாட்டைக் கண்டு திகைப்புற்றனர். சீமோனுடைய பங்காளிகளான செபதேயுவின் மக்கள் யாக்கோபும் யோவானும் அவ்வாறே திகைத்தார்கள். இயேசு சீமோனை நோக்கி, "அஞ்சாதே; இது முதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்" என்று சொன்னார். (லூக்கா 5:9-11)

# அமெரிக்க அரசுத் தலைவர் டிரம்ப் அவர்களுக்கு திருத்தந்தை வாழ்த்து

**வத்திக்கான்:** அமெரிக்க ஐக்கிய நாட்டின் 47 ஆவது அரசுத்தலைவராகப் பதவியேற்றுள்ள டொனால்ட் ஜே. டிரம்ப் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றினை அனுப்பியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

சனவரி 20 திங்கள் கிழமை அமெரிக்க ஐக்கிய நாட்டின் நாற்பத்து ஏழாவது அரசுத்தலைவராகப் பொறுப்பேற்றுள்ள டொனால்டு அவர்கள் தனது உயர் கடமைகளை நிறைவேற்ற எல்லாம் வல்ல கடவுள் ஞானத்தையும், ஆற்றலையும், பாதுகாப்பையும் வழங்குவார் என்று அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரசுத் தலைவராக இரண்டாவது முறை பொறுப்பேற்கும் டிரம்ப் அவர்களுக்குத் தனது வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்துள்ள திருத்தந்தை அவர்கள், வாய்ப்புக்களையும், அனைவரையும் வரவேற்கும் நிலத்தின் அடையாளமாய்த் திகழும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் டொனால்டு அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் மக்கள் செழிப்புடன் வாழ்ந்து பாகுபாடு, விலக்கிவைத்தல் ஆகியவை இல்லாத நீதியுள்ள சமுகத்தை உழைக்கப் பாடுபடுவார்கள் என்று தான் நம்புவதாகவும் எடுத்துரைத்துள்ளார்.
ஏராளமான சவால்களை மனித குடும்பம் எதிர்கொள்ளும் வேளையில், மக்களிடையே அமைதி மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்தும் அவரது முயற்சிக்கு கடவுள் உதவ செபிப்ப தாகத் தெரிவித்துள்ள திருத்தந்தை அவர்கள், அரசுத்தலைவர் அவரது குடும்பத்தார் மற்றும் மக்கள் அனைவர் மீதும் இறைவனின் ஆசீரை வழங்குவதாகவும் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



அமெரிக்க ஐக்கிய நாட்டின் 47 ஆவது அரசுத்தலைவர் டொனால்ட் ஜே. டிரம்ப்

**அரசுத்தலைவர் டொனால்டு அவர்கள் தனது உயர்கடமைகளை நிறைவேற்ற எல்லாம் வல்ல கடவுள் ஞானத்தையும், ஆற்றலையும், பாதுகாப்பை வழங்குவார்- திருத்தந்தை பிரான்சிஸ்**

சனவரி 20 திங்கள்கிழமை டொனால்ட் டிரம்ப் அமெரிக்காவின் 47வது அதிபராகத் தனது இரண்டாவது பதவிக் காலத்தைத் தொடங்கியுள்ளார். ஜே.டி. வான்ஸ் துணை அதிபராகப் பொறுப் பேற்றுள்ளார்.

*மெரினா ராஜ் - வத்திக்கான்*

## காசாவில் மீண்டும் வாழ்வைத் துவக்க நம்பிக்கைப் பிறந்துள்ளது

காசாவில் மீண்டும் வாழ்வைத் துவக்க நம்பிக்கைப் பிறந்துள்ளது. மத்தியக் கிழக்குப் பகுதியில் இடைக்காலப் போர்நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது காசா பகுதி மக்களிடையே புதிய நம்பிக்கைகளை விதைத்துள்ளதாகவும், மக்கள் மீண்டும் வாழத் துவங்கியுள்ளார்கள் எனவும் கூறினார் காசாவின் ஒரே கத்தோலிக்கப் பங்குதளத்தின் பங்குகுரு Gabriel Romanelli.

ஹாமாஸ் குழுவுக்கும் இஸ்ராயேலுக்கும் இடையே போர் நிறுத்தம் இடம்பெற்றுவருவது குறித்து தன் கருத்துக்களை வெளியிட்ட அருள்பணி ரொம னெல்லி அவர்கள், ஓராண்டிற்கு மேலாக இடம்பெற்றுவரும் போர் தற்போது நிறுத்தப் பட்டுள்ளது, உடனடி அமைதியைக் குறிக்கவில்லை, இன்னும் துப்பாக்கிச் சுடுதல் மற்றும் குண்டு வெடிப்புகளின் சப்தங்களைக் கேட்க முடிகிறது என மேலும் உரைத்தார்.

முழு அமைதி திரும்ப நாட்கள் ஆகும் என்பது உண்மையெனினும், மக்களிடம் மீண்டும் வாழ் வைத் துவக்கலாம் என்ற நம்பிக்கைப் பிறந்துள்ளது என உரைத்த அருள்பணி ரொமனெல்லி அவர்கள், மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிவர இன்னும் அச்சம் கொண்டேயுள்ளார்கள், ஏனெனில் பல பகுதிகள் இன்னும் இராணுவத்தின் இடமாகவே நோக்கப்படுகின்றன என்றார்.

போர் நிறுத்தக் காலத்திலும் கடலுக்குச் சென்று நீந்துவதற்கான சிறு ஆசைக்குக்கூட தடைவிதிக் கப்பட்டுள்ளதாக உரைத்த அருள்பணியாளர், எவ்வாறு வீடுகளை மீண்டும் கட்டியெழுப்புவது, எவ்வாறு வாழ்வைத் துவங்குவது என்ற நிச்சயமற்ற நிலை மக்களில் இன்னும் நிலவி வருவதாக மேலும் கூறினார்.

காசாவில் உள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படுவதாகவும், சுத்தக்குடிநீர், மின்சாரம் போன்றவைகளும் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாக இருப்பதாகவும், காசா பகுதி முற்றிலுமாக சேதப்படுத்தப்பட்டுள்ளதால் அதனை மீண்டும் கட்டியெழுப்பவேண்டிய பணி துவக்கப்படவேண்டும் என்பதையும் எடுத்துரைத் தார் அருள்பணி ரொமனெல்லி.

கிறிஸ்டோபர் பிரான்சிஸ் – வத்திக்கான்

## கோலாலம்பூர் உயர் மறைமாவட்ட பொங்கல் கொண்டாட்டம்

மந்தின்: மேற்கண்ட உயர் மறை மாவட்டத்தின் தமிழ் திருத்தூது ஆணையம் (ATLAC) அதன் முதல் மறைமாவட்ட அளவிலான பொங்கல் விழாவை இங்குள்ள புனித அலோசியஸ் மற்றும் புனித தெரேசம்மாள் பங்குகளில் கூட்டு ஒத்துழைப்புடன் இணைந்து கொண்டாடி யது. இவ்விரு பங்குகளின் பங்குத் தந்தையான அருள் பணி கிறிஸ்தபர் சூசைப்பிள்ளை அவர்களின் முழு ஒத்துழைப்பிலும் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் ஆதரவிலும், இதர அருள்பணியாள்கள் மற்றம் ஏறக்குறைய ஆயிரம் இறை மக்கள் வருகையினாலும் பொங்கல் விழா சிறப்புற்றது.

இக்கொண்டாட்டத்திற்குச் சிறப்பு வருகையாளராக பேராயர் ஜூலியன் லியாவ் மற்றும் ஓய்வுப்பெற்ற பேராயர் முர்ஃபி பாக்கியம் ஆகியோர் அழைக் கப்பட்டிருந்தனர். பேராயர் பொங்கல் பானையில் பாலூற்றி பொங்கலைத் துவக்கி வைத்தார்.

தொடர்ந்து, பொங்கல் பொங்கியதும், பொங்கலோ பொங்கல் முழக்கத்துடன் பொங்கல் திருப்பலி போராயர் தலைமையில் தொடங்கியது, தம்பின் புனித ஜோன் வியான்னி பங்கின் பங்குத்தந்தை அருள்பணி அல்பெர்ட் ஆரோக்கியசாமி அவர்கள் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளில் மறையுரையாற்றினார். திருப்பலியின் இறுதியில், இரு பேராயர் களுக்கும் ஏற்பாட்டுக்குழு சார்பில் பொன்னாடை அணிவித்து சிறபிக்கப் பட்டது.

நிறைவாக, தமிழ் திருத்தூதுர் பணிக் குழுவின் தலைவர் திரு ஜேசுதாஸ் அந்தோணிசாமி அவர்கள் நன்றியுரை ஆற்றி னார். அவரது நன்றியுரையில் அழைப்பை ஏற்று வருகைத் தந்த இரு ஆயர்களுக்கும், அனைத்து வகையிலும் ஆதரவும் ஒத்துழைப்பும் தந்து வெற்றிக்குத் தோள் கொடுத்த அருள்பணி கிறிஸ்தபர் சூசைப்பிள்ளை அவர்களுக்கும், ஆலோசகர் அருள்பணி போனவெஞ்சர் இராயப்பன் அவருகளுக்கும், வருகைத் தந்த அருள்பணி யாளர்களுக்கும், பங்கு மக்களுக்கும், துணை பணிக்குழு அங்கத்தினர்களுக்கும், குறிப்பாக உணவு, வாகனம் நிறுத்தும் இட வசதி ஏற்பாடு, திருவழிப்பாடு, காணிக்கை பொங்கல், கலை நிகழ்ச்சி, கூடார அமைப்பு குழுவினருக்கும், இளைஞர் குழுவினருக்கும், மற்றும் கம்போங் பாண்டன் புனித ஆரோக்கிய அன்னை பாடற்குழுவினர், நன்கொடையாளர்கள், நிறைவாக உயர் மறை மாவட்டத்தின் தமிழ் திருத்தூது ஆணையத்தின் செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி மாலை சூட்டினார்.



பேராயர் ஜூலியன் பொங்கல் பானையில் பால் ஊற்றுகிறார்

திருப்பலி இறுதி ஆசீரைத் தொடர்ந்து, பொங்கலும், இரவு உணவும் அனைவருக்கும் பரிமாரப்பட்டது. மாலை 7 அளவில் ஆலய வளாகத்தில் அமைக் கப்பட்டிருந்த கூடாரத்தில் தமிழ் கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

-நேசா தேவசகாயம், கிள்ளான்

# ஜொகூர் பாரு, புனித அமலோற்பவ அன்னை பங்கில் பொங்கல் விழா

ஜொகூர் பாரு: இங்குள்ள புனித அமலோற்பவ அன்னை பங்கில் கடந்த சனவரி 18 ஆம் திகதி, சனிக்கிழமை, மாலை 5மணிக்குப் பொங்கல் விழா திருப்பலியோடு கொண்டாடப்பட்டது.



அருள்பணி ஜேம்ஸ் இராஜேந்திரன் அவர்கள் திருப்பலியை நிறைவேற்ற, இவ்வாண்டு பொங்கல் கொண்டாட்டம் மிகவும் விமரிசையாக இருந்தது.

இவ்விழாவில், ஏறக்குறைய 300 பங்குமக்கள் கலந்துகொண்டனர். இவர்களில் பெரும்பாலோர் அன்று தமிழ் பண்பாட்டு உடை அணிந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆலய வளாகம் தமிழ் பண்பாட்டு முறையிலான அலங்கரிப்பால் மிளர்ந்தது. ஆலய வாசலில் பொங்கலிட்டு மக்கள் கடவுளுக்கு காணிக்கையாகச் செலுத்தி நன்றி நவில்ந்தனர். திருப்பலிக்குப் பின்னர் மக்களுக்கு விருந்துபசரிப்பும் நடைபெற்றது.

-எட்ரியன் லோகநாதன்

## திருத்தந்தையின் மாதாந்திர இறைவேண்டல் கருத்து

### பிப்ரவரி 2025

கிறிஸ்துவின் திருத்தூதுப் பணியாற்றிட குருத்துவம் மற்றும் துறவற வாழ்வின் அழைப்பை உணரும் இளையோரின் விருப்பங்களையும் சந்தேகங்களையும் திருஅவை சமூகம் வரவேற்க மன்றாடுவோம்

# புனித அன்னம்மாள் திருத்தலத்தில் பொங்கல் விழா

புக்கிட் மெர்தாஜாம்: பொங்கலோ! பொங்கல் ! மற்பானையில் பால் பொங்கி வரும் வேளையில் கூடியிருந்தோர் அனைவரும் குரல் எழுப்பினர். தமிழகம் மற்றும் தென்னிந்தியாவின் பல பகுதிகளில் உள்ள தமிழர்களால் கொண்டாடப்படும் முக்கியமான விழாக்களில் பொங்கல் விழாவும் ஒன்றாகும். மலேசயா உட்பட தமிழ் மக்கள் அதிகம் வசிக்கும் உலகின் பிற பகுதிகளில் பொங்கல் ஒரு முக்கிய திருவிழாவாக இக்காலத்தில் கொண்டாடப் படுகிறது.

கடந்த 19 சனவரி, ஞாயிற்றுக்கிழமை, புக்கிட் மெர்தாஜாமில் உள்ள மைனர் பசிலிக்கா புனித அன்னம்மாள் திருத்தலத்தில், தமிழ் திருப்பலிக்குமுன் ஆலய வாசலில் பொங்கலிடப்பட்டது. தேவாலயம் கரும்புகளால் அலங்கரிக்கப்பட்டு, தேவாலயத்தின் முன் வாசல் அழகிய கோலத்துடன் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தமிழ் திருத்தூதுப் பணிக்குழு தலைவர் செல்வமேரி தாஸ் அவர்களுடன் துணை பங்குத் தந்தை அருள்பணி நெல்சன் ஜோசப், திருத்தொண்டர்கள் லாசரஸ் ஜொனாதன் மற்றும் தேவ் கேமரூன் ஆகியோர் சூழ பொங்கல் சிறப்பிக்கப்பட்டது.




திருப்பலியில், மலேசியாவில் அபரிமிதமான விளைச்சலுக்கு நன்றி செலுத்தும் வகையில் காய்கறிகள், பழங்கள் மற்றும் இனிப்புப் பண்டங்கள் காணிக்கையாக ஒப்புகொடுக்கப்பட்டன. திருப்பலியைத் தொடர்ந்து, வாழை இலை உணவு அனைவருக்கும் பரிமாரப் பட்டது.

-மர்லினா சாரா சில்வெஸ்டர்

# கூலிம், திருஇருதய ஆண்டவர் ஆலயத்தில் பொங்கல் விழா

கூலிம்: கடந்த டிசம்பர் 19ஆம் தேதி, கூலிம் திருஇருதய ஆண்டவர் பொது பொங்கல் நிகழ்ச்சி திருமதி ரோஸ்லின் மற்றும் அவர்தம் குழுவினரோடு ஏற்பாடு செய்யப்ப்ட்டது.

தொடர்ந்து காலை ஒன்பது மணிக்கு பங்குதந்தையான பேரருட்தந்தை



ஹென்றி ராஜு அவர்கள் பொங்கல் திருநாள் சிறப்பு திருப்பலியை நிறைவேற்றினர். இன்றைய நற்செய்தியாக (யோவான் 2:2-12) "அவர் உங்களுக்கு சொல்வதெல்லாம் செய்யுங்கள்" என்ற வாசகம் முன்வைக்கப்பட்டது.

பொங்கல் திருவிழா இறைவனுக்கும், இயற்கைக்கும், உழவர்களுக்கும் நன்றி கூறும் விழாவாக மட்டுமல்லாது நமது ஒற்றுமையை அதிகம் வலியுறுத்தும் விழாவாகவாகும் என பங்கு தந்தை கூறினார். காணிக்கையின் போது, மனித விளைச்சலை பிரதிபலிக்கும் வகையில் காய்கறிகளும், சமைத்த பொங்கலும் பங்கு மக்களால் காணிக்கையாக செலுத்தப்பட்டன.

திருப்பலி முடிவுற்றதும், திருக்குடும்ப மண்டபத்தில் மறைக்கல்வி மாணவர்கள் கோலாட்டம் மற்றும் கிறிஸ்துவ பாடல்களைப் பாடியதோடு இளையோர்களும் நடனமாடி மகிழ்வித்தனர்.

**பட்டிமன்றம்**

முதன் முறையாக பங்கின் ஏற்பாட்டு குழு ஆறு பேர் கொண்ட சிறப்பான பட்டிமன்றத்தை “அனைத்திலும் சிறந்து விளங்கியவர்கள் ஆண்களா? பெண்களா?” என்ற தலைப்பில் ஏற்பாடு செய்திருந்தது. இப்பட்டிமன்றத்தை நடுவராக திரு. ஜோன் குப்புசவரி சிறப்பாக வழிநடத்தினார் நிகழ்ச்சியின் நிறைவில் பங்குத்தந்தை சிறப்பு பரிசுகளை வழங்கி, இறையாசீர் வழங்கினார். மதிய உணவுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

-ஜோன் குப்புசவரி

## காசா பகுதியில் போர்நிறுத்தத்தை வரவேற்றுள்ளது யுனிசெ.:.ப் நிறுவனம்!

காசா பகுதியில் மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரிடையே போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்த அறிவிப்பை வரவேற்றுள்ளது யுனிசெஃப் நிறுவனம்.

ஜனவரி 16, வியாழன் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையை ஒன்றில் இந்தப் போர்நிறுத்தத்தை பெரிதும் வரவேற்பதாகக் கூறியுள்ள அந்நிறுவனம், போரின்போது, ஏற்பட்ட உயிர் இழப்பு, இடம்பெயர்வு மற்றும் பிரிவினை உள்ளிட்ட கடுமையான துன்பங்களைச் சந்தித்த குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கு உதவவேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளது.

இந்த மோதலில் குறைந்தது 14,500 பேர் இறந்துள்ளனர், 17,000 குழந்தைகள் காப்பாளர்கள் இல்லாமல் உள்ளனர் என்று அதன் அறிக்கையில் எடுத்துக்காட்டியுள்ள அந்நிறுவனம், இப்போரினால் இதுவரை 10 இலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ள அதேவேளையில், உடல்நலம், நீர் வழங்கல் மற்றும் கல்வி உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

# ஒளியின் மக்களாக ஒளிர்வோம்!

இன்று ஆண்டின் பொதுக்காலம் 5ம் ஞாயிறு. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மலைப்பொழிவின் ஒருபகுதியாக வருவது தான் இன்றைய நாள் நற்செய்தி வாசகம். இதில் இயேசு, “நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்” என்கிறார். அப்படிச் சொல்லிவிட்டு “எவரும் விளக்கை ஏற்றி மரக்காலுக்குள் வைப்பதில்லை; மாறாக விளக்குத் தண்டின்மீதே வைப்பர். அப்பொழுதான் அது வீட்டிலுள்ள அனைவருக்கும் ஒளிதரும்” என்கிறார்.

முதல் வாசகத்தில், எசாயா, அவருடைய பாவத்தின் காரணமாக அவர் எவ்வளவு தகுதியற்றவர் என்பதை உணர்கிறார். ஆனாலும், “யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்?” என வினவும் கடவுளின் குரலுக்கு “றுமொழியாக, “இதோ நானிருக்கிறேன். அடியேனை அனுப்பும்” என்றதை அறிகிறோம்.

இரண்டாம் வாசக்தில், பவுல் அடிகள், இயேசுவை நம்பியவர்களை துன்புறுத்தியதால், தான் தகுதியற்றவர் என்று பவுல் ஒப்புக்கொள்கிறார். ஆயினும்கூட, அவர் இயேசுவுடனான தனிப்பட்ட உறவால் அழைக்கப்பட்டதை ஏற்று நற்செய்தி பணியில் தீவிரமாகச் செயல்பட்ட்தைச் சுட்டிக்காட்டுகிறார்.



இதோ நானிருக்கிறேன். அடியேனை அனுப்பும்”

நற்செய்தியில், “நானே உலகின் ஒளி” என்று சொல்லும் இயேசு, இன்று நம்மைப் பார்த்து, “நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்” என்கிறார். இதன் பொருள், இயேசுவின் ஒளியைதான் நாம் உலகில் பிரதிபலிக்கிறோம் என்பதாகும் ஆகவே நாம் ஒவ்வொருவரும் உலகிற்கு (இயேசுவின்) ஒளியாக இருக்கவேண்டும். இது இறைமகன் இயேசு நமக்குத் தரும் அழைப்பாக இருக்கின்றது. ஆனால் நம்மால், நம்முடைய துணையால் மட்டும் உலகிற்கு ஒளியாக இருக்கமுடியுமா? என்றால், நிச்சயமாக முடியாது. ஏனென்றால், “என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்யமுடியாது” என்பார் இயேசு (யோவான் 15: 5) ஆம், நம்மால் மட்டும் உலகிற்கு ஒளிதரமுடியாது.

ஆண்டவர் இயேசு சொல்கின்ற இன்னொரு செய்தி: விளக்கை எடுத்து மரக்காலில் வைத்திருத்தல் கூடாது என்பதுதான். கடவுள் ஒவ்வொருவருக்கும் பல்வேறு திறமைகளை, வாய்ப்பு வசதிகளைக் கொடுத்திருக்கிறார். ஆனால் நிறையப் பேர் அவற்றைப் பயன்படுத்தாமல் வாழ்வதுதான் வேதனையளிக்கின்ற ஒன்றாக இருக்கின்றது. ஆண்டவர் இயேசு சொல்லும் தாலந்து உவமையில் வரும் கடைசி மனிதனைப் போன்றுதான் நாம் கடவுள் நமக்குக் கொடுத்த திறமைகளை பயன்படுத்தாமல் அவற்றை மூடிமறைத்து விடுகின்றோம். எனவே நம்முடைய ஒளி உலகினருக்குப் பயன்தரும்படியாக இருக்கச் செய்யும்.

“உன்னிடையே இருக்கும் நுகத்தை அகற்றிவிட்டு, சுட்டிக் காட்டி குற்றம் சாற்றுவதையும், பொல்லாதன பேசுவதையும் நிறுத்திவிட்டு, பசித்தோருக்கு உன்னையே கையளித்து, வறியோரின் தேவையை நிறைவுசெய்வாயானால், இருள் நடுவே உன் ஒளி உதிக்கும்; இருண்ட உன் நிலை நண்பகல் போல் ஆகும்” என்று அங்கே வாசிக்கின்றோம். ஆம், நாம் அடுத்தவரைப் பற்றிய அக்கறையோடு, அடுத்தவர் குறித்த நல்ல எண்ணத்தோடு வாழும்போது நம்முடைய வாழ்வு ஒளிமயமானதாக இருக்கும்; நாம் உலகிற்கு ஒளியாக இருக்கமுடியும். இதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

ஆகவே, உலகிற்கு ஒளியாக வாழ அழைக்கப்பட்டிருக்கும் நாம், இறைவனின் துணையோடு. வறியவரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் வழியாக, வேதனையில் இருப் போருக்கு ஆறுதலை வழங்குவதன் வழியாக உலகிற்கு ஒளியாவோம். ஒளியை மறைத்துவைக்கும் எண்ணத்தை விடுவோம். அதன்வழியாக இறையருள் நிறைவாய் பெறுவோம்.

த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா

### பொதுக்காலம் 5ஆம் வாரம் - ஞாயிறு

| | |
|---|---|
| முதல் வாசகம்: | எசாயா 6: 1-8 |
| திரு.பாடல் | 138:1-2a.2bc3.4-5.7c-8 |
| 2-ம் வாசகம் | 1 கொரி 15: 1-11 |
| லூக்கா | 5:1-11 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3 ( 3)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை: வாரம் 1**